## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**STC.No.120/2024**

Deposition of Witness of PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வகுமார் | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 05th May 2026.

எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் சாவடிபாளையம் புதூரில் குடியிருந்து வருகிறேன். முத்தூர் மெயின் ரோட்டில் உள்ள பாலமுருகன் ே ஹாட்டலில் வேலை செய்து வருகிறேன். கடந்த 08.03.2023 ம் தேதி காலையில் எங்கள் ேஹாட்டல் முன்வு 2 இருசக்கர வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டது. அதில் ஒரு வாகனத்தில் வந்த நபருக்கு ாலில் அடிபட்டு கால் முறிந்துவிட்டது. அவரை ஆம்புலன்ஸ்-ல் ஏற்றி நாங்கள் மருத்தவமனைக்கு அனுப்பி வைத்தேன் இந்த விபத்து சம்பந்தமாக மறுநாள் காலை 11.30 மணியளவில் மொடக்குறிச்சி போலீஸார் நான் வேலை செய்யும் கடைக்கு முன்பாக வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து தயார் செய்தார். அதில் நானும், ராமசாமி என்பவரும் கையெழுத்து செய்தோம். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

பார்வை மகஜரில் முதலில் உள்ள கையொப்பத்திற்கும், இரண்டாவதாக உள்ள கையொப்பத்திற்கு இடைவெளி அதிகமாக உள்ளது என்றால் சரிதான். நான் மொடக்குறிச்சி காவல்நிலையத்திற்கு சென்று போலீஸார் கேட்டுக் கொண்டதற்காக வெற்று தாளில் கையொப்பம் செய்துவிட்டு பொய் சாட்சியம்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.05.05 18:42:14 +0530

அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் விபத்து நடந்த இடத்தில் தான் கையொப்பம் செய்தேன். நான் போலீஸார் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.05.05 18:42:05 +0530

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

## STC.No.120/2024

Deposition of Witness of PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜேஸ் | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 27st ஜனவரி 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் ஈரோடு பெரும்பள்ளம் ஓடையில் குடியிருந்து வருகிறேன். சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 08.03.2023 ஆம் தேதி காலை 6 மணிக்கு நானும் என்னுடன் முருகன், சுரேஷ் என்பவரும் சென்ட்ரிங் வேலைக்காக ஊத்துக்குளிக்கு வந்திருந்தோம். காலை 9 மணியளவில் சாப்பிடுவதற்காக மொடக்குறிச்சி ரோட்டில் உள்ள பாலமுருகன் மெஸ்ஸில் சாப்பிட சென்றோம் நாங்கள் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்து என்னுடைய இரு சக்கர வாகனத்தில் சுரேஷ் அமர்ந்தும் மற்றொரு இரு சக்கர வாகனத்தை முருகன் எடுத்துக் கொண்டும் ஈரோடு ரோட்டில் தெற்கு நோக்கி சென்ற போது ஈரோடு ரோட்டில் இருந்து மொடக்குறிச்சி நோக்கி ஒரு பல்சர் பைக் அதனை ஓட்டுனர் அதிவேகமாக ஓட்டி வந்து முருகன் வந்த பைக்கின் மீது மோதி விட்டார்.

முருகன் ரோட்டின் வலதுபுறமாக கீழே விழுந்து விட்டார். அவருடைய பைக் ரோட்டின் இடதுபுறமாக சென்று விழுந்தது. முருகனுக்கு வலதுகால் ஒடிந்து விட்டது. வலதுபுற தோள்பட்டையிலும் அவருக்கு அடிபட்டது. நான் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தேன். ஆம்புலன்ஸ் வந்தவுடன் அவரை அனுப்பி விட்டுவிட்டு அவருடைய மனைவிக்கு தகவல் சொல்லிவிட்டு ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு சேர்த்தேன்.போலீசார் மருத்துவமனைக்கு வந்து விசாரித்தார்கள். காவல் ஆய்வாளரும் உடனே சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். அவர் வந்து 108 ஆம்புலன்ஸில் முருகனை ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவரை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும் அவர் இன்று நீதிமன்றத்தில் அவர் இன்று நீதிமன்றத்தில் இல்லை அவரது பெயர் சுபாஷ் ஆகும் அவருடைய ஊர் சாமிநாதபுரம் ஆகும். விபத்து

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.05.05 18:42:35 +0530

ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் பதிவு எண் 4711 ஆகும் பல்சர் பைக் ஆகும். முருகன் ஈரோடு அரசு மருத்துவமனையில் முதலுதவி பெற்றுக்கொண்டு பின்பு தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டார். அங்கு இரண்டு மாதங்கள் அவர் சிகிச்சையில் இருந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**போதிய வாய்ப்பு கொடுத்தும் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை சாட்சியம் முடித்து வைக்கப்பட்டது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.05.05 18:42:40 +0530